**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)**
**செயல்முறைகள், சென்னை – 600 006**

**ந. க. எண். 26952/அ4/இ3/2021, நாள். 30.09.2022.**

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – 15.03.2021 நிலவரப்படி இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்குத் தற்காலிக அடிப்படையில் உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்குதல் – ஆணை வழங்கப்படுகிறது.

**பார்வை :**
1. அரசாணை எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள். 21.02.2002.
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க. எண். 26952/அ4/இ3/2021, நாள். 07.07.2021, 12.07.2021, 03.11.2021, 28.12.2021 மற்றும் 11.03.2022.

*****

பார்வை (2)ல் காணும் செயல்முறைகளில் வெளியிடப்பட்டுள்ள 15.03.2021 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி வாய்ந்தோர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட இளநிலை உதவியாளர் / தட்டச்சருக்குத் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை–12ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு அளித்து, அன்னாரது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| 15.03.2021 தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின்படி வரிசை எண் | பணியாளர் பெயர் / பதவி மற்றும் பணியாற்றும் அலுவலகம் / பள்ளி (திரு. / திருமதி / செல்வி) | பதவி உயர்வில் உதவியாளராக நியமனம் வழங்கப்படும் அலுவலகம் / பள்ளி |
|---|---|---|
| 54 | சு. தேவி,<br>தட்டச்சர்,<br>முதன்மைக் கல்வி அலுவலகம்,<br>திருவண்ணாமலை,<br>திருவண்ணாமலை மாவட்டம். | அரசு மேல்நிலைப்பள்ளி,<br>மூங்கில்துறைப்பட்டு,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். |

2. மேற்படி பணியாளரைத் தற்போதைய பணியிலிருந்து விடுவித்துப் புதிய இடத்தில் உடன் பணியில் சேர அறிவுறுத்துமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. மேற்படி பணியாளர் உதவியாளர் பதவியில் பணியில் சேரும் நாள் முதல் 7–வது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளபடி உதவியாளர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.

(த.பி.பா.)

4. மேற்குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் உதவியாளராகப் பணியேற்க விருப்பமில்லை எனில், மேற்படி பதவி உயர்வினை மூன்றாண்டுகளுக்குத் தற்காலிகமாகவோ அல்லது நிபந்தனையின்றி நிரந்தரமாகவோத் துறக்க எழுத்து மூலம் தனது விருப்பத்தினை **ஏழு தினங்களுக்குள்** தவறாமல் தெரிவிக்க வேண்டும்.

5. தட்டச்சர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு பெறும் பணியாளர் எனில், உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும். தவறினால், தேர்ச்சி பெறும் நாள் வரையில் ஊதிய உயர்வுகள் நிறுத்தி வைக்கப்படும்.

6. சம்பந்தப்பட்ட பணியாளர் பதவி உயர்வு பெற்று பணிவிடுப்பு / பணியேற்பு கோரும் நிலையில் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை என்பதனை உறுதி செய்து கொண்டு அனுமதித்திட சம்பந்தப்பட்ட அலுவலக தலைமைக்குத் தெரிவிக்கப்படுகிறது.

7. சார்ந்த பணியாளர் பதவி உயர்வு பெறுவதால் ஏற்படும் காலிப் பணியிடம் குறித்த பதிவுகள் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS) மேற்கொள்ளப்பட வேண்டுமென முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. மேற்படி பணியாளரின் பணிவிடுவிப்பு மற்றும் பணியேற்பு அறிக்கையினை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடன் பணிந்தனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்திராணி 06/x/2022

**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)**

03/10/22

**பெறுநர் :** சம்பந்தப்பட்ட பணியாளர் – உரிய அலுவலர் மூலமாக

**நகல் :** சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.

**நகல் :** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.